**<u>சுருக்கம்</u>**

அறிவிப்பு - சமூக நீதித் துறை – 2026-2027-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பளிக்கும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வண்ணம்** "**சரிநிகர் – சம வேலை வாய்ப்பு விருது**" வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>சமூக நீதித் (சிஉதி) துறை</u>**

**அரசாணை (நிலை) எண். 81** **நாள்:16.10.2026**

**பராபவ, புரட்டாசி 29 -ஆம் நாள்**

**திருவள்ளுவர் ஆண்டு-2057**

**படிக்கப்பட்டது:-**

தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் கடித எண்.டி1/10/2026, நாள்.21.09.2026.

**<u>ஆணை</u>:-**

2026-2027 ஆம் ஆண்டிற்கான சமூகநீதித் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சமூக நீதித்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"**தனியார் நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு "சரிநிகர் – சம வேலை வாய்ப்பு - திட்டம் அறிமுகப்படுத்தப்படும்**.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்கும் தனியார் நிறுவனங்களை அங்கீகரித்தல், நியாயமான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த ஊதிய தொகுப்புகளுடன் பணியமர்த்தும் நிறுவனங்களை ஊக்குவித்து தனியார் நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த பணியாளர்களின் தொடர்ச்சியான ஆள்சேர்ப்பு மற்றும் தக்கவைப்பை உறுதி செய்வதை உள்ளடக்கிய சமமான வேலைவாய்ப்பிற்கு பங்களிக்க தனியார் நிறுவனத்தின் அங்கீகாரத்தை ஊக்குவிக்க விருது வழங்கலாம் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். தமிழ்நாட்டில் செயல்படும் தகுதியுள்ள தனியார் துறை நிறுவனங்கள், பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள், சேவைத் துறையில் வேலையளிப்பவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், உற்பத்தி அலகுகள் மற்றும் பிற பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், மற்றும் அரசால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச வரம்புகளுக்கு உட்பட்டு வேலையளிப்பவர்கள் பரிசீலிக்கலாம் என தெரிவித்து தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு "சரிநிகர் – சம வேலைவாய்ப்பு விருது" என்னும் விருதினை வழங்கலாம் என மேலாண்மை இயக்குநர் தாட்கோ அரசிற்கு பரிந்துரைத்துள்ளார்.

3. தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு சமூகநீதித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை

செயல்படுத்தும் விதமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிகளவில் வேலை வாய்ப்பளிக்கும் தனியார் நிறுவனங்களை தெரிவு செய்ய பின்வரும் உறுப்பினர்களை கொண்டு தேர்வு குழு நியமித்து அரசு ஆணையிடுகிறது. அத்தனியார் நிறுவனங்களை இத்தேர்வுக்குழு மூலம் தெரிவு செய்து அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் "சரிநிகர் - சம வேலை வாய்ப்பு விருது" என்னும் விருது வழங்கும் திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்த தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. இக்குழு இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கி நிறுவனங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்திட ஆணையிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் | தலைவர் |
| 2. | மேலாண்மை இயக்குநர், தாட்கோ | உறுப்பினர் |
| 3. | இயக்குநர், பழங்குடியினர் நலம் | உறுப்பினர் |
| 4, | மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்களால் பரிந்துரைக்கப்படும் சிறப்பு பிரதிநிதி (தேவைக்கேற்ப) | உறுப்பினர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டாக்டர். என்.சுப்பையன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், (முகூபொ) ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
(இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் வழியாக)
அனைத்து திட்ட அலுவலர்கள்
(இயக்குநர், பழங்குடியினர் நலம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளர்கள்,
(மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 600 009/18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை- 600 005/8/9
நகல்
மாண்புமிகு சமூகநீதித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
சமூக நீதித்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை 600009.
சமூகநீதி (ஆதிந -5) த்துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

16/10/2024

**பிரிவு அலுவலர்**

16/10/24